UPDF
WWW.UPDF.COM

## ආයතනයේ නම : ජාතික සත්වෝද්‍යාන දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

## நிறுவனத்தின் பெயர் : தேசிய விலங்கியல் தோட்டங்கள் துறை

நிலையியற் கட்டளையின் இலக்கம் 119 (4) இன்படி விதிமுறைகளில் பொது கணக்கு குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு ஏற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் மற்றும் கௌரவ அமைச்சர் அவர்களின் அவதானிப்புகளினதும் சமர்ப்பிப்பு

## Name of the Institution: Department of National Zoological Gardens

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

UPDF
WWW.UPDF.COM

**பாராளுமன்ற அமர்வு எண்: 79**

**நிறுவனத்தின் பெயர் : தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்**

| | **நிதிச் சட்ட திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை மதிப்பீட்டின் பிரகாரம் இனங்காணப்பட்ட பலவீனங்கள்** | **அதற்கு எடுக்கப்பட்டுள்ள செயன்முறைகள் மற்றும் அவற்றின் தற்கால நிலைமை** |
|---|---|---|
| | **முதலாவது பகுதி** | |
| 01 | சேதங்கள் பற்றிய கோவை புதுப்பிக்கப்பட்டு நடாத்தப்படவில்லை. | சேதங்கள் பற்றிய கோவை ஆரம்பிக்கப்பட்டு, அது தற்போது புதுப்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுச் செல்லப்படுகின்றது. |
| 02 | இடர் கோவை புதுப்பிக்கப்பட்டு வைக்கப்படவில்லை. | 2023 ஆண்டில் தயாரிக்கப்பட்ட இடர் கோவை 2024 ஆண்டிற்காக புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு, அப்புதுப்பிக்கப்பட்ட இடர் கோவையை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டம் 2023.12.14 திகதி திணைக்கள கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பிரதி முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென தயவுடன் அறியத் தருகிறேன். |
| 03 | உள்ளகக் கணக்காய்வுக்காக ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. | உள்ளகக் கணக்காய்வுக்கான பதில்களை ஏனைய பிரிவுகளின் மூலம் பெற்றுக் கொண்டு மீண்டும் தயார் செய்து, கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதனால், ஒரு மாதத்திற்குள் பதில்களை வழங்குவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் இருந்தாலும், 2023 ஆண்டிலிருந்து உள்ளகக் கணக்காய்வுகளை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் |

UPDF
WWW.UPDF.COM

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டதென தயவுடன் அறியத் தருகிறேன். |
| 04 | 2020.08.28 திகதிய இலக்கம் 01/2020 உடைய அரச நிதி சுற்றறிக்கையில் 1 பகுதியில் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள நி.பி 756 (6) பிரகாரம் பொருள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட தினத்துக்கு உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எமது திணைக்களத்தின் கீழ் உப நிறுவனங்கள் 04 செயற்படுவதென்பதனால், உரிய காலப் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்ட நிபி. 756 (6) பிரகாரம் பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனிக்கப்பட வேண்டிய காலப் பகுதியொன்று செல்வதனால், 2022 ஆண்டிற்கு உரியதாக பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைளை 2023 ஆண்டினுள் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, 2023 ஆண்டிற்கு உரியதாக பொருள் கணக்கெடுப்பிற்கான தற்போது இறுதிக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறுவதென தயவுடன் அறியத் தருகிறேன். |
| 05 | வருடாந்த பொருட் கணிப்பீட்டிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மேலதிக, குறைபாடுகள் பற்றிய பரிந்துரைகளும் ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப் பகுதிக்குள் உரிய காலப் பகுதிக்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.. | வருடாந்த பொருட் கணிப்பீட்டிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மேலதிக, குறைபாடுகள் பற்றிய பரிந்துரைகளும் ஏனைய பரிந்துரைகளும் 2023 ஆண்டில் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகளுடன் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென தயவுடன் அறியத் தருகிறேன். |
| 05 | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்பட்டிருக்கவில்லை. | அரச இலச்சினையை வரைந்த போது வாகனத்தின் பூசப்பட்டிருந்த உரு அழிவுக்கு உள்ளாகியமையினால், அரச இலச்சினையை Board 01 இன் ஆதாரத்தில் தயாரித்து அனைத்து வாகனங்களிலும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென அறியத் தருகின்றேன். |
| 06 | வங்கி ஒப்பீட்டு அறிக்கை உரிய தினத்துக்கு ஒழுங்குபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆண்டில் மே மாதத்திலிருந்து வங்கி ஒப்பீட்டு அறிக்கையை உரிய தினத்துக்கு தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவுடன் அறியத் தருகிறேன். |
| | ஒரு வருடத்தை விட மேற்பட்ட | 2023 ஆண்டில் அந்நிலுவை கடன் மீதியைத் |

UPDF
WWW.UPDF.COM

| | | |
|---|---|---|
| | காலத்திலிருந்து இருந்து வருகின்ற நிலுவையிலுள்ள கடன் மீதிகள் காணப்பட்டன. | தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதென தயவுடன் அறியத் தருகிறேன். |
| 08 | பொது வைப்புக் கணக்கில் காலம் முடிவடைந்த வைப்புகள் தொடர்பாக நி.பி..571 பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | பொது வைப்புக் கணக்கில் கணக்கில் காலம் முடிவடைந்த அனைத்து வைப்புக்களும் தற்போது தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளதென அறியத் தருகின்றேன். |
| 09 | அனுமதிக்கப்பட்ட வரையறையை விட மேற்பட்ட பணிக்குழு இணைக்கப்பட்டிருந்தமை. | • அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை - 106 ஆகும்.<br>• ஓர் ஊழியர் 2023.10.17 திகதி க.உ.அ. III பதவிக்கு விடுவிக்கப்பட்டார்.<br>• சபாரி பூங்காவில் கள உதவியாளர் திரு. சமிந்த ருவன் குமார அவர்களுக்கு 2021.03.23 திகதியிலிருந்து சேவையை விட்டுச் சென்ற அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.<br>• திரு. நியான் தனுஷிக ஹெட்டிஆரச்சி அவர்களுக்கு 2021.09.13 திகதியிலிருந்து பதவியை விட்டுச் சென்ற அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (2023.09.20 திகதிய கடிதத்தின் மூலம்)<br>• மேலுள்ள ஊழியர்கள் மூவரும் பணிக் குழுவிலிருந்து நீங்கினால் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 106 ஆக சரி செய்யப்பட்டது.<br>• மேலும் திரு. டீ. டீ. டீ. இந்திரஜித் அவர்கள் - கள உதவியாளர் 2023.06.24 திகதி இறந்ததனால் தற்கால கள உதவியாளர்களின் எண்ணிக்கை 10 ஆகும்.<br>• கள உதவியாளர் – திருமதி டீ. வாசனா ஹர்ஷனீ 2024.05.17 திகதி 3 சேவையிலிருந்து விலகினார். தற்போது தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தில் கள உதவியாளர்கள் 104 சேவையாற்றுகின்றனர்.<br>• அதன்படி, கள உதவியாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆகும்.<br>• |

**இரண்டாவது பகுதி**

UPDF
WWW.UPDF.COM

| | | |
|---|---|---|
| 01. | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% க்கும் குறைய மட்டமொன்றில் காணப்பட்டது. | 2021 ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக அரசாங்க நிதிக் கட்டுப்பாடு பற்றிய நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துவதனால் அதிகாரிகளுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவது வரையறுக்கப்பட்டிருந்தது. |
| 02. | நிறுவனத்தின் கணக்குகள் பற்றி கணக்காய்வுக் கருத்து நடைமுறை மட்டத்திலோ அல்லது சாதகமற்ற நிலையில் இருந்தது. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை அரசாங்கத்தின் கணக்குகள் பற்றிய ஆலோனைச் சபையின் பரிந்துரைகள்/ உத்தரவுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் கணக்குகளை ஒழுங்குபடுத்துவதில் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என தயவுடன் அறியத் தருகிறேன். |

..........................................

குணதாச சமரசிங்ஹ,
செயலாளர்,
வனஜீவராசிகள் மற்றும் வன
வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

Gunadasa Samarasinghe
Secretary
Ministry of Wildlife and Forest

..........................................

எம். எஸ். எல். ஆர் பி. மாரசிங்ஹ,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்

M.S.L.R.P. Marasinghe
Director General (Acting)
Department of National Zoological Gardens,
Dehiwala.